


# பாலியல்ரீதியான துன்புறுத்தல் குறித்துப் புகார் அளித்தல்

## உங்கள் மருத்துவர் எல்லை மீறினார் என்று நினைக்கிறீர்களா?

நோயாளி-மருத்துவர் உறவுமுறை நம்பிக்கையின் பேரில் அமைவதாகும். உங்கள் மருத்துவர் பாலியல்ரீதியாகத் துன்புறுத்தல் கொடுத்தால், அது நம்பிக்கையை மீறிய மற்றும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயலாகும். ஒரு மருத்துவருக்கும் ஒரு நோயாளிக்கும் இடையே எத்தகைய பாலியல்ரீதியான நடத்தையும் பாலியல் தொல்லையாகும்.

உங்கள் மருத்துவர் எல்லை மீறினார் என்று நீங்கள் நினைத்தால், ஒண்டாரியோ மருத்துவர் மற்றும் அறுவைச்சிகிச்சையாளர் கல்லூரி (College of Physicians and Surgeons of Ontario) நீங்கள் கூறுவதைக் கேட்க விரும்புகிறது. நீங்கள் எங்களை 1-800-268-7096, எக்ஸ்ட். 629 என்ற எண்ணில் அழைப்பதன் மூலம் தொடங்கலாம்.

மருத்துவர்களுக்கான மாகாணத்தின் கட்டுப்பாட்டாளராக உள்ள இக்கல்லூரி, பாலியல் தொல்லைக்கு எதிரான பூஜ்யம் சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்கிறது. ஒவ்வொரு புகாரையும் நாங்கள் விசாரணை செய்கிறோம்.

புகாரளிக்க முன்வருவது மிகவும் கடினமான முடிவாக இருக்கலாம். உங்களுக்கு உதவுவதற்கு, சாத்தியமான பாலியல் தொல்லை குறித்துப் புகார் அளிப்பது ஏன் முக்கியம் என்பதையும், அவ்வாறு புகாரளிக்கும் போது நீங்கள் எதை எதிர்பார்க்கலாம் என்பது குறித்தும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம்.

### நான் எவ்வாறு பாலியல்ரீதியான தொல்லையை அடையாளம் கண்டறிவது?

மருத்துவம் பார்க்கும் வேளையில், மருத்துவர்கள் தங்கள் கைகளைப் பயன்படுத்தி உங்கள் உடலின் பல்வேறு பாகங்களைத் தொட வேண்டியிபலகும். இது மருத்துவப் பரிசோதனைகளுக்கு அவசியம் தேவைப்படும் ஒரு நடைமுறையாகும் (உதாரணமாக, உங்களுடைய ஒட்டுமொத்த உடல்நலத்தைப் பரிசோதனை செய்வதற்கு அல்லது உங்களுக்கு இருக்கும் பிரச்சினையைப் பற்றி அறிந்துகொள்வதற்கு). அவ்வாறு நிகழும் போது, மருத்துவர் என்ன செய்யப் போகிறார் என்பதை அவர் உங்களிடம் தெரிவிக்க வேண்டும், உங்களைத் தொடுவதற்கு அனுமதி கேட்க வேண்டும், நீங்கள் கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டும், மேலும் உங்களை மரியாதையுடன் நடத்த வேண்டும். மருத்துவர்கள் அனைத்து நேரங்களிலும் நோயாளிகளிடம் தொழில்முறையிலும் அறநெறி தவறாமலும் நடந்துகொள்வதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

பாலியல் தொல்லை என்பது ஒரு கடுமையான நம்பிக்கை மீறலாகும், இதில் பின்வருபவை உள்ளடங்கலாம்:

- **ஒரு நோயாளியுடன் ஏதேனும் வடிவத்தில் பாலியல்ரீதியான உறவு வைத்துக்கொள்ளுதல்.**
- **தேவையற்ற அல்லது முறையற்ற உடல் பரிசோதனைகள்.**

  உதாரணங்கள்:
  - உங்கள் மார்பகங்கள், பிறப்புறுப்புகள், பிட்டங்கள் அல்லது இடுப்புப் பகுதி ஆகியவற்றைச் சிகிச்சை அல்லது மதிப்பீட்டுக்கான தேவையின்றி தொடுதல்;
  - மருத்துவ முறையில் அல்லாமல் பாலியல் முறையில் பரிசோதனை மேற்கொள்ளுதல்; அல்லது
  - உங்கள் அனுமதியின்றி அல்லது எந்த விளக்கமும் இன்றி உங்களைத் தொடுதல்

*ஒரு மருத்துவர் நீங்கள் அசௌகரியமாக உணரும் வகையில் ஏதேனும் கூறினாரா அல்லது செய்தாரா? ஒரு ஒண்டாரியோ மருத்துவரால் நீங்கள் பாலியல்ரீதியான தொல்லையை அனுபவித்திருக்கக்கூடும் என்று நீங்கள் நினைத்தால், தயவுசெய்து 1-800-268-7096 ext. 626 என்ற எண்ணில் ஒண்டாரியோ மருத்துவர்கள் மற்றும் அறுவைச்சிகிச்சையாளர்கள் கல்லூரியை அழைக்கவும்.*

- **பொருத்தமில்லாத கருத்துரைகள், சைகைகள் அல்லது நடத்தை. உதாரணங்கள்:**
  - பாலியல் குறித்து சாடைமாடையாக ஏதேனும் கூறுதல்;
  - உங்களுடன் தனிமையில் பழகுவதற்கு அனுமதி கேட்பது;
  - உங்களுடைய தோற்றம் அல்லது உடை குறித்துப் பாலியல்ரீதியாக கருத்து தெரிவிப்பது;
  - உங்களுடைய பாலியல் சார்ந்த உறவுமுறைகள் அல்லது பாலியல் நாட்டம் குறித்துத் தேவையின்றி கருத்து தெரிவிப்பது;
  - பாலியல்ரீதியாக இகழ்வது அல்லது மனதைப் புண்படுத்தும் வகையில் கருத்து தெரிவிப்பது அல்லது நகைச்சுவை செய்வது; அல்லது
  - தேவையின்றி கவனத்தை ஈர்ப்பது (முத்தமிடுவது அல்லது கட்டியணைப்பது போன்ற செயல்கள்).

ஒரு மருத்துவர் நோயாளியிடம் இவ்வாறு நடந்துகொண்டால், அது பாலியல் தொல்லை எனக் கருதப்படுகிறது.

## நான் மறுப்பு தெரிவிக்கவில்லை என்றால் என்னவாகும்?

நீங்கள் மறுப்பு தெரிவிக்காமல் அவற்றுக்கு உடன்பட்டாலும் கூட, சட்டப்படி மருத்துவரின் சில வேளை நோயாளிதான் உறவுமுறையைத் தொடங்கியிருக்கக் கூடும். அது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. இத்தகைய சூழ்நிலைகளில் நோயாளி சம்மதம் தெரிவித்ததாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. எல்லா நேரங்களிலும், ஒரு பொருத்தமான உறவுமுறையைப் புரிந்துகொண்டு நடந்துகொள்வது மருத்துவரின் பொறுப்பாகும், அது நோயாளியின் பொறுப்பு அல்ல.

## நான் ஏன் கல்லூரியிடம் கூற வேண்டும்?

மருத்துவரின் நடவடிக்கைகள் சரியில்லாத போது, அது குறித்துக் நாங்கள் அறிவதற்காக, கல்லூரி நோயாளர்களில் சார்ந்திருக்கிறது. நாங்கள் பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு அதுவே எங்களுக்கு உதவுகிறது. பெரும்பாலான நேரம், புகாரளிக்கும் மக்களிடமிருந்தே நாங்கள் பாலியல் தொல்லை குறித்து அறிந்துகொள்கிறோம்.

பாலியல்ரீதியான தொல்லை சம்பவங்கள் அனேகமான நேரங்களில் தனிப்பட்டவையாக இருப்பதில்லை, என்ன நடந்தது என கல்லூரிக்குக் கூறுவதன் மூலம் மற்றவர்களுக்கும் நீங்கள் உதவக்கூடும், நீங்கள் அளிக்கும் தகவல்கள் நாங்கள் திறம்பட விசாரணை செய்வதற்கும் கூட எங்களை அனுமதிக்கிறது.

உங்கள் மருத்துவரின் மூலம் பாலியல்ரீதியான தொல்லையைப் புகார் அளிக்கச் செய்வதும் கூட உங்களுக்கு உதவலாம். அது உங்கள் மன இறுக்கத்தை விடுவிக்கக்கூடும். கல்லூரி உங்கள் விவகாரத்தை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

## நான் யாரிடம் தெரிவிக்க வேண்டும்?

உங்கள் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுவதற்கு, நாங்கள் எவ்வாறு உதவ முடியும் என்பதை அறிந்துகொள்வதற்கு மற்றும்/அல்லது புகார் ஒன்றை அளிப்பதற்கு நீங்கள் கல்லூரியை அழைக்கலாம். நீங்கள் அவ்வாறு அழைக்கும் போது, சமூகப் பணியில் பின்னணியைக் கொண்டிருக்கின்ற மற்றும் பாலியல்ரீதியாக தொல்லையை சந்தித்துள்ள நோயாளிகளுக்கு உதவுவதில் பயிற்சியும் அனுபவமும் பெற்றுள்ள ஒரு ஆதரவு நபரிடம் நீங்கள் பேசுவீர்கள். நீங்கள் 1-800-268-7096, ext. 629 என்ற எண்ணை அழைக்கலாம்.

முதலில் அழைக்கும் போது, நீங்கள் விரும்பவில்லை எனில் உங்கள் பெயரை நீங்கள் தெரிவிக்க வேண்டியதில்லை. என்ன நடந்தது என்பதை நீங்கள் கூறலாம். மேலும், கல்லூரியின் புகார்கள் மற்றும் ஒழுங்குமுறைச் செயல்முறை குறித்தும், என்ன எதிர்பார்க்கலாம் என்பது குறித்தும் நீங்கள் அறிந்துகொள்ளலாம். நீங்கள் விரும்பினால், நீங்கள் நேரில் சந்திக்கலாம். நீங்கள் அதிகாரப்பூர்வமாக புகாரளிக்க முடிவு செய்தால், நாங்கள் விசாரணையைத் தொடங்குவோம். இந்த விசாரணையின் போது எங்களுடைய ஆதரவு நபர் உங்களுக்கு உதவிடத் தயாராக இருப்பார்.

## நான் புகார் செய்துள்ளதை மருத்துவர் அறிவாரா?

ஆம், நீங்கள் புகாரளிக்க முடிவுசெய்தால் அவருக்குத் தெரியப்படுத்தப்படும். விசாரணையில், மருத்துவர் பதிலளிப்பதற்கு, கல்லூரி உங்கள் பெயரை மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டியது கட்டாயமாகும்.

## என்னுடைய புகார் தீவிரமானதாக எடுத்துக்கொள்ளப்படுமா?

பாலியல்ரீதியான தொல்லை அல்லது வேறு ஏதேனும் பற்றிய எந்தப் புகார்களையும் கல்லூரி தீவிரமானதாகவே எடுத்துக் கொள்கிறது. பொதுமக்களைப் பாதுகாப்பதற்கான எங்களுடைய பொறுப்பின் ஒரு பகுதியாக, அனைத்துப் புகார்களையும் நாங்கள் விரிவாக விசாரணை செய்கிறோம்.

## நான் புகார் ஒன்றைச் செய்தால், அதற்கான செயல்முறை என்ன?

புகார்கள் எவ்வாறு கையாளப்படுகின்றன, அதில் எவையெல்லாம் சம்பந்தப்படும் என்பது குறித்து மேலும் அதிக விவரங்களை **cpso.on.ca** என்ற எங்களுடைய இணையத்தளத்தில் காணலாம்.

## ஒரு மருத்துவர் எனக்குப் பாலியல்ரீதியாகத் தொல்லை கொடுத்திருந்தால், கல்லூரியால் எனக்கு வேறு எந்த விதத்தில் உதவ முடியும்?

தங்களுடைய மருத்துவரால் பாலியல்ரீதியாக தொல்லையை அனுபவித்துள்ள நோயாளிகளுக்கு தேவையான சிகிச்சை அல்லது ஆலோசனைக் கட்டணங்களுக்குக் கல்லூரி நிதியுதவி அளிக்கிறது. நீங்கள் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு, நீங்கள் தகுதியானவரா என்று கல்லூரியின் நோயாளித் தொடர்புகள் குழு (Patient Relations Committee) தீர்மானிக்கும். நிதிஉதவி குறித்தத் தகவல்களுக்கு, தயவுசெய்து **www.cpso.on.ca/therapy** என்ற இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள். அல்லது 1-800-268-7096, ext. 211 என்ற எண்ணை அழையுங்கள்.